LIBRARY 31 DEC 2002 PERIODICAL DIVISION


# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHSEACONERY CHURCH OF CEYLON


"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கிறான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகிறான்."



## புதிய பிரதம பேராயர் அதி வண. DR. றோவான் வில்லியம்ஸ்



அங்கிலிக்கன் திருச்சபையின் 104வது கன்டபறி பேராயராக அதி. வண. Dr. றோவான் வில்லியம்ஸ் (Rt. Rev. Dr. Rowan Williams) ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பேராயர் பல்வேறு திறமைகள் படைத்தவர். கல்வியிலும், எழுத்தாற்றலிலும், ஆசிரியத் துவத்திலும் தீவிர ஆன்மிகத்திலும் - திருமறை ஆய்விலும் மேய்ப்புப் பணியிலும் - நீதி, சமாதானம் ஆகிய பணிகள் மீதும் தாகம் உள்ளவர். இந்த திறமைகள் காலத்தின் பல்வேறு மாற்றங்களுக்கு முகம் கொடுத்து தமது பணிகளை முன்னெடுத்துச் செல்ல இறைவன் கொடுத்த வரங்களாகும். எனவே பல ஆற்றல் கொண்ட பேராயர் எமக்கு கிடைத்தது இறைவன் தந்த கொடையாகும்.

கடந்த காலத்தில் வேல்ஸ் நகரத்தில் ஆயராக பணியாற்றி

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## காலத்தின் தேவைக்கேற்ப கல்வியில் மாற்றம் வேண்டும்

### சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில்

இன்று நாம் வாழ்கின்ற பல்சமய பின்னணியில் பெரும் பான்மை இந்து மக்களினால் சூழப்பட்டு இருக்கின்ற எமது மண்ணில் கிறிஸ்தவர்களாக ஒரு கல்லூரியை ஏன் கொண்டு நடத்த வேண்டும். இவ்வினாக்கான விடை காண முயற்சிக்கின்றபோது கடந்த 200 ஆண்டுகளுக்கு மேல் இக்கல்லூரி இவ்விடையை இவ்வுலகிற்கு காட்டியுள்ளதைக் காணலாம்.

ஒரு மதத்தில் உள்ளவர்களை இன்னொரு மதத்திற்கு மாற்றுவது நோக்கமல்ல. அதாவது இந்து மதத்தில் இருப்பவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவது நோக்கமல்ல. மாறாக கிறிஸ்தவ விழுமியங்களையும், கிறிஸ்தவ பெறுமதிகளையும் எடுத்துக் கூறுவதே அதன் நோக்கம் என்று கலாநிதி E. S. தேவசகாயம் அவர்கள் 14-09-2002 அன்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவின்போது கூறினார்.

அவர் மேலும் உரை யாற்றுகையில் சிறப்பாக மாணவர் களுடைய விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, மன்னிப்பு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல், தலைமைத்துவத்திற்குரிய தகை மைகளை வளர்த்தல், ஆசிரியர் மாணவர் முதலிய விழுமியங்களை எடுத்துக் கூறல் ஆகும்.

இன்று உலகிலே சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் முதலியவை அற்றுப்போய்க் காணப்படுகின்றது. இப்பேற்பட்ட ஓர் உலகில் எல்லா மக்களுக்குமான சமத்துவத்தை எடுத்துக் காட்டும் ஓர் நிறுவனம் பாடசாலையாகும். அவர்கள் எம் மதத்தை சேர்ந்த

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## ஐக்கியம் கிடைத்தாலே ஆன்மீகம் வளரும்

- வண. கதிரேசம்பிள்ளை -

சபைகளுக்கிடையான ஐக்கியம் கிறிஸ்துவை தலைவராகக் கொண்டமைந்த திருச்சபை, வரலாற்றுப் பாதையில் பல்வேறு காரணங்களினால் பல துண்டுகளாக பிளவுபட்டு இருப்பதை நாம் அவதானிக்கலாம். இத்திருச்சபை பிளவுகள் திருச்சபையின் வளர்ச்சியில் ஒரு தடையாக காணப்படுகின்றது. ஒன்றாக அதனை நிர்வகிப்பது கடினமாக இருக்கின்ற அதேவேளை ஒன்றாக வழிபட முடியாத சூழ்நிலையும் ஏற்படுவதை நாம் அவதானிக்கலாம்.

இவ்வாறு 21-09-2002 அன்று பருத்தித்துறையில் நடைபெற்ற மெதடிஸ்து - அங்கலிக்கன் வாலிபர் ஒன்றுகூடலில் மெதடிஸ்த திருச் சபையின் வடக்கு கிழக்கு சபா சங்கத் தலைவரும் கல்குடா நற்செய்தி பயிற்சிக்கழக அதிப ருமாகிய வண. கதிரேசம் பிள்ளை அடிகளார் உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்று கையில் வரலாற்றில் திருச்சபையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டது. குறிப்பாக இலங்கையில் 1934ம் ஆண்டு கண்டி திரித்துவ கல்லூரியில் நடைபெற்ற மாநாடு 1940ல் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம் உருவாக்கப்பட்டது குறிப்பிடலாம்.

அன்று திருச்சபை ஐக்கியத்துள் விதைக்கப்பட்ட விதைகள் இன்றும் பலனழிக்க முடியாது இருக்கின்றது. யோவான் 17ம் அதிகாரத்தில் இயேசு நானும் தந்தையும் ஒன்றாக இருப்பதுபோல திருச்சபைகள் அனைத்தும் ஒன்றாக ஒன்றித்து வாழ வேண்டும் என போதித்தார்.

இயேசுவின் அத்தகைய மன் றாட்டுக்கு இன்னமும் பதிலளிக்க முடியாது இருக்கின்றது. எனவே வேறுபாடுகள் எல்லாவற்றையும் களைந்து ஒரு பொதுவான சபையாக ஒன்றிணைவது இன்றைய காலகட்டத்தில் மிக கடினமான ஒன்றாகும்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)


கிறிஸ்மஸ் இதழுக்கு
உங்கள் ஆக்கங்களை
தெளிவுக்கு தெளிவாக
20-11-02 முன்
எழுதி அனுப்புங்கள்


## வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளுங்கள்

- வண. சக்திவேல் -

இயேசு இவ்வுலகில் இறை யரசைப் போதிப்பதற்காக வந்தார். அவரது போதனைகள், புதுமைகள், மரணம், உயிர்த்தெழுதல் அனைத்தும இறையரசை மையப்படுத்துவதாக அமைந்தது. இந்த இறையரசை மாதிரியாகவும் உபகரணமாகவும் அடையாளமாகவும் சபை காணப் படுகின்றது.

இவ்வாறு 22-08-2002 அன்று பண்டாரவளையில் நடைபெற்ற C.C.Y.M வதிவிட பாசறையில் வண. சக்திவேல் அடிகளார் சபை களுக்கிடையிலான ஐக்கியம் என்ற தலைப்பில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரை யாற்றும்போது கிறிஸ்துவை தலையாகக் கொண்டு உடலாக கொண்டமைந்த சபைகள் இன்று பல பிரிவுகளாக பிரிந்து காணப் படுகின்றது. இது சபைகளுக் கிடையேயுள்ள ஐக்கியம் இல்லாத் தன்மைகளை எடுத்துக் காட்டு வதுடன் சபைக்கும் கிறிஸ்துவிற்கும் இன்றைய சபை ஆதித் திருச் சபையின் பண்புகளில் இருந்து தன்னை மறைத்துவிட்டது.

இயேசு தமது சீடர்களாக வேறுபட்ட தன்மைகளுடைய மக்களை உள்ளடக்கியிருந்தார். ஆனால் இன்று திருச்சபை வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ள தயங்குகின்றது. திருச்சபைக்கும் பிறமதங்களுக்கிடையிலான உறவு நலிவுத்தன்மை காணப்படுகின்றது.




'சமாதனம்' இக்காலத்தின் ஓர் தேவை
சமகாலத்தில் வேண்டப்படும் மகத்தான மாற்றம்
சமூக நீரோட்டத்தில் கலக்க வேண்டிய ஓர் நீரோடை
பகைவர்கள் மனதில் வளர வேண்டிய ஓர் சிறந்த பயிர்
அரசியல் வாதிகளிலே வேரூன்ற வேண்டிய ஓர் ஆலமரம்
நாட்டின் நாடி நரம்புகளிலே நாளாந்தம் ஓடவேண்டிய
இரத்த நாளம்
மதங்களிடையே வளர்க்க வேண்டிய ஓர் ஆன்மீக
ஆணிவேர்
மக்க்ளாலே காக்கப்பட வேண்டிய அரிய பொக்கிஷம்.

தெய்வேந்திரராஜா (தேவா)
'கரிதாஸ்' ~ கொழும்பு

## இளைஞர்களே சவால்களுக்கு முகம் கொடுங்கள்

- வண.பிதா. S.P. நேசக்குமார் -

நாங்கள் வாலிபர்களாக எங்கு சென்று கொண்டிருக்கின்றோம். என்ன செய்து கொண்டி ருக் கின்றோம். மாறிவரும் உலகில் இரைச்சல்களின் மத்தியில் அமர்ந்த மெல்லிய சத்தத்தை நாங்கள் கேட்க ஆயத்தமா.

இவ்வாறு 22-08-2002 அன்று பண்டாரவளையில் நடைபெற்ற C.C.Y.M வதிவிட பாசறையின்போது யாழ். குருமுதல்வர் Rev. S. P. நேசக்குமார் அடிகளார் வேதப் படிப்பின்போது கூறினார்.

அவர் மேலும் உரையாற்று கையில் அன்று எலியா ஆகாப்பின் மனைவியான ஜெஸ்சபேலுக்கு பயந்து சூரைச்செடியின் கீழ் ஒழித்துக் கொண்டு தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முற்பட்டான். இதற்கான காரணம் என்னவெனில் எலியா, யாவே உண்மையான கடவுள் என்பதனை பாகாலின் தீர்க்கர்களின் முன்னிலையில் நிரூபித்துக் காட்டினான். இவ் வேளையிலே தான் கடவுள் எலியாவை பார்த்து நீ இங்கு என்ன செய்து கொண்டு இருக்கிறாய் என்ற கேள்வியை அன்று எலியாவை பார்த்து மட்டுமல்லாது கடவுள் எங்கள் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கிறார். எமது வாலிபர் சங்கத்தில், திருச்சபையில், தேசத்தில் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். இவ்வினாவை நாம் அடிக்கடி கேட்க அழைக்கப் படுகின்றோம்.

மேலும் சோர்வுற்று எதிர் பார்ப்புக்கள் எல்லாம் ஏமாற்றங் களாகி ஒரு குறுகிய வட்டத்திற்குள் தமது பணி அமையப் போகின்றது என கலங்கி நின்ற எலியாவைப் பார்த்த கடவுள் நீ பிரயாணம் பண்ண வேண்டிய தூரம் இன்னும் அதிகமாக உள்ளது எனக் கூறினார். வாலிபர்களாக நாங்கள் இன்று தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் ஏற்பட்ட இழப்புகள் சோர்வுகள் அவற்றோடு தேசத்தில் இரண்டு சகாப்தங்களாக நடைபெற்றுக் கொண்டு இருக்கும் யுத்தத்தினால் உடல் மற்றும் உளங்களில் பாதிக்கப்பட்டு சோர்வுற்று இருக்கும் எங்களைப் பார்த்து நாங்கள் போகவேண்டிய பாதை இன்னும் அதிகம் என்கின்ற சவாலை இறைவன் எமக்கு தருகின்றார்.

## வழிகாட்டிகளே நல்லதை விதையுங்கள்

Rev. S.D.P. செல்வன்

தனிநபர்கள் தங்களுக்குள் ளேயே உடல் உள ரீதிகளில் பிளவுபட்டுள்ளார்கள். இது மனி தனின் இயல்பு, பின்னணி, பண்பாடு, கலாச்சாரம் போன்ற காரணிகளில் தங்கியுள்ளது. இதனடிப்படையில் மனிதனின் சிந்தனை ஆற்றல்களும், செயற்பாடுகளும் ஆளுக்காள் வேறுபடுவதை அவதானிக்கலாம். இவ்வேறுபாடுகளை புரிந்து கொள்ளாத பட்சத்திலே பிரிவினைகள் தோன்றுகின்றது.

இவ்வாறு 22-08-2002 அன்று பண்டாரவளையில் C.C.Y.M மூன்றுநாள் வதிவிட பாசறையில் Rev. S.D.P. செல்வன் அடிகளார் உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்று கையில் பிள்ளைகள் பிறந்த காலத்தில் பெற்றோர்கள் அவர் களுக்கு வழங்கும் ஆலோச னைகள், பிறரைப் பற்றி வழங்கும் ஆலோசனைகள் முதலியவை அவர்களின் எதிர்கால வாழ்வின

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## தனித்துவத்தை ஏற்று ஒற்றுமையை கட்டி வளர்ப்போமா?

வண.A. ஸ்ரீபன்

தேசிய அடிப்படையில் ஐக்கி யத்தை நாம் உண்டுபண்ண வேண்டுமேயானால் மூன்று முக்கிய இலக்குகளில் எமது சிந்தனைகளை நோக்க வேண்டும்.

இன ரீதியில், மத ரீதியில், பொருளாதார ரீதியில், இன்று நாம் வாழ்கின்ற இலங்கையில் நான்கு பெரும் இனங்கள் வாழுகின்றன. அதில் இரண்டு சகாப்தங்களில் தமிழ் - சிங்கள மக்களின் பிரச்சனைகள் அண்மைக் காலத்தில் முஸ்லீம் - தமிழ் மக்களின் உரசல் நிலையும் தோன்றியுள்ளது அவதானிக்கலாம்.

இந்நிலையில் எவ்வாறு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது லூக் 10:25- வசன அடிப்படையில் இயேசு ஒரு யூதனாக இருந்தும் சமாரியரில் இருந்த நற்பணியை எடுத்துக் காட்டினார். சமாரியரைக் குறித்து யூத சமுதாயம் அவருக்கு கொடுத்த கருத்து இயல்புகளுக்கு அப்பால் சென்று செயற்பட்டார். இவ்வகையில் தமிழர்களாகிய நாம் ஒன்றிணைந்து சிங்களவர்கள், முஸ்லீம் மக்களின் நற்பண்புகளை எடுத்துக் கூற ஆயத்தமா. அக்குறைகளைக் குறித்து அரசியல்வாதிகளால் தரப்பட்ட கருத்தியல்புகளுக்கு அப்பால் நாம் செல்ல ஆயத்தமா.

மத அடிப்படையில் உற்று நோக்கும்போது இலங்கையில் காணப்படும் பல்சமய சூழ்நிலை யில் மதங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் ஏசாயாவின் கருத்து முக்கியமானது. ஏசாயா 11:7-11 வரையுள்ள பகுதியில் பசுவும் - கரடியும், சிங்கமும் - மாடும் ஒன்றாக இணைந்து வாழுவதை ஏசாயா கூறுகின்றார். இந்நிலையில் அம்மிருகங்கள் தத்தம் தனித் துவத்தை இழந்து போகாவண்ணம் செயலாற்றுவதை அவதானிக்கலாம். இவ்வகையில் இலங்கையில்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHSEACONERY CHURCH OF CEYLON

## தெளிவுரை

காலம் வரும் என்று காத்திராது
இக்காலத்தையே
பயனுள்ளதாக்கி கொள்வோம்
அது இருத்தால் இது இல்லை
இது இருத்தால் அது இல்லை-என
சாட்டுச் சொல்லி
காலத்தை கரைத்து விடுவோர்
பெருகுவதால் தான்
காலமே சரியில்லை என்பார்.
கடவுள் படைத்த நாட்களையும்
மனித சக்தியையும்
தாலந்துகளையும் இழந்து
சாத்திர சமுதாயம்
உருவாக்கி விட்டது நம் நாட்டில்.
நோய், துன்பம், பசி, பட்டினி
என்பதை விட,
முயற்சியின்றி தூங்கியே
'காலம் சரியில்லை'-என
சாத்திரம் பார்ப்போரும் இன்று
நம்மிடத்தில் தான் மலிந்துவிட்டனர்.
இறைவன் படைத்த நாளும்
நேரமும் மனித வாழ்வின்
மகத்துவத்துக்காகவே அன்றி
அழிவுக்கில்லை என்பதே உண்மை
இறைவன் நற்செய்தியில்
ஆழமாக தருகின்றார்
"எந்த வீட்டு வேலையாளும்
இரு தலைவர்களுக்குப் பணிவிடை
செய்ய முடியாது. ஏனெனில்
ஒருவரை வெறுத்து மற்றவரிடம்
அவர் அன்பு கொள்வார்
அல்லது ஒருவரைச் சார்ந்து
கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார்
நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும்
பணிவிடை செய்ய
முடியாது" லூக் 16:13
இதில் எதைக் கடைப்பிடிக்கின்றோம்,!
ஒருகையில் பைபிளும்,
மறுகையில் சாதகமும் கொண்டு
அலையும் மக்களே
இரு தலைவனுக்கு கீழ்
வேலை பார்க்கும் ஊழியனைப்போல்
திண்டாடுவது ஏன்?
இறைவனுக்கும் சாத்தானுக்கும்
ஓரே நேரத்தில் பணிவிடை
செய்யுமுடியுமா? -இதில்
யாரில் அதிக நம்பிக்கை வைக்கின்றீர்கள்
என்பதை இறைவன் அறிவார்
உள் ஒன்றை வைத்து
புறமொன்றாக உறவாடும்
போலித்தனம் இன்று
இறை உறவிலும் பரவி
விரிசலைத்தான் ஏற்படுத்தி
விடுகின்றது!
சவால்களை வெல்ல
சதாகங்கள் சாதகமாகிவிடாது
இறைபற்றுதியுடன் எதிர்கொள்ளும்
கிறிஸ்தவ வாழ்வால் சாட்சிபகர
தெளிவு கொண்ட உறவுகளே
இறைய தேவை!
இவைதான் இடறல்படாத
இறை உறவைத் தரும்!
இடறல்பட்டதால் ஏற்படும் விளைவை
அப்போஸ்தலர் வாழ்வில் நற்செய்தி
விபரிக்கின்றது அல்லவா!
தெளிவுள்ள உறவால்தான்
தெய்வதரிசனத்தை காணலாம்
காலத்தைச் சொல்லி காலத்தை
கடாத்தாது
காலத்தில் நிலைக்கும் புதிய
காலத்தை உருவாக்குவதில்
காலத்தை பயன்படுத்துவதே
இக்காலத்தின் தேவையாகும்!

(ஆ-ர்)

*ஆக்கங்கள் எழுதுங்கள் தெளிவு கண்டு பிரசுரிப்போம்.*

**தெளிவு**
யாழ்.குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

வீலை ரூ. 5/=

## காலத்தின் தேவைக்கேற்ப....

வர்களாக இருந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் கல்வி சமமமாகவே வழங்கப்படுகின்றது. எமது கல்வி எம்மை சீர்திருத்தம் செய்ய வேண்டும். காலத்தின் குறிகளை அறிந்து, அதற்கேற்ப கல்வி முறையில் மாற்றங்கள் உண்டு பண்ணப்படுவதுபோல் எம்மை மாற்றி அமைக்க வேண்டும்.

மாறிக் கொண்டு வரும் இவ்வுலகில் ஆங்கிலத்தின் தேவை அடிக்கடி உணரப்படுகின்றது. இன்று ஆங்கில கல்வி சரிவர புகட்டப்படாவிடில் உயர் கல்வியை பெற்றுக் கொள்வதில் கடினத் தன்மை ஏற்பட வேண்டிவரும். எமது ஆரம்ப காலத்தில் இதற்கான தேவை உணரப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் தற்காலத்தில் அதில் அதிகளவு அக்கறை காட்டப் பட்டதாக எனக்கு தெரியவில்லை. எனவே கல்லூரி அதிகளவு அக்கறை செலுத்த வேண்டும் என்றார்.

# துன்பத்தில் இன்னுமொரு பக்கம்

**வண.செ.ஜெயந்தன் பச்சேக் அ.ம.தி.**

பூமியன் முகத்தே 'துன்பம்' என்ற கேள்விக்கு எல்லா மதங்களும் தத்தமது கொள்கை யினடிப்படையில் வியாக்கியானம் கொடுக்கின்றன. ஆசையே துன் பங்களுக்கு அடிப்படை என்றும், கர்மவினையென்றும், அறியாமை யென்றும், தண்டனையென்றும், புடமிடுதல் என்றும் இறைதிட்டம் என்றும் மதங்கள் துன்பத்தை துய்த்துணர முயல்கின்றன. இன்றைய நாள் விஞ்ஞானமே துன்பத்தின் மூலவேர் எது என நோக்காது அதைப் போக்குகின்ற மார்க்கம் என்ன என கொடு ககுக் கட்டிக கொண்டு யிலே வருகின்ற உபாதை களெல்லாம் துன்பமாக இருப்பினும் இலட்சிய வெற்றிக்காக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு இலட்சியப் பாதையும் கரடு முரடானதே. கிறிஸ்தவமும் ஒரு இலட்சியப் பாதைதான், கடின மான பயணம்தான். என்னைட் பின்செல்ல விரும்புகின்றவன் தன்னையே மறுத்து தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப்பின்செல்லட்டும்.

மனிதர்கள் எல்லாம் நிறைவு போல் நாமும் ஒப்புக் கொடுத்து எம்மைப் புடமிட்டு தூய்மைப் படுத்தி இறைவனுக்கண்மையில் எம்மைப் இட்டுச்செல்ல வேண்டும என கருதுகிறது. அது சரி யானதே. வருகின்றதுன்ப துயரங் களை வலிந்து தேடிப் பெற்றுக் கொள்வது கூடாது. அது இறை சித்தமுமாக இருக்கமுடியாது.

வாய்மொழியாகாது. மாறாக அழுபவர்களே நீங்கள் சிரித்து மகிழுவீர்கள், என்பதே அவரது விருப்பம். ஆக மனிதன் வருந்தாமல் மகிழ வேண்டும் என்பதுதான் நாசரேத் தூரானின் போதனையாக இருக்கின்றது.

துன்பத்தைத் தாங்கிக் கொள்ள வரம் கேட்கலாமே யொழிய துன்பங்களைக் கேட்கக் கூடாது வந்த துன்பம் நீங்க வரம் கேட்கலாமேயொழிய துன்பத்தை வலிந்து வருவித்துக் கொள்ளக் கூடாது. கடைநிலையில் இருந்து, குறைநிலையிலிருந்து, மேல் நிலைக்கும், நிறைவிற்கும் முன்னேற வேண்டும் என்கிற இயல்பு இயற்கையாகவே மனிதனி டத்திலே உண்டு. அதுவே அவனை முன்னேற் றத்தை நோக்கிய முயற்சியாக உந்தித் தள்ளுகின்றது. மனிதன் நிறைவை நோக்கிப் பயணிக்க அழைக்கப் பட்டிருக்கின்றான்.

துன்பத்தைப்பற்றி, துயரத்தைப் பற்றி ஏழ்மையைப்பற்றி, இழிவைப்பற்றி மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகளை விளக்கங்களை விடுத்து இறைவன் திருவுளம் என்ன என்பது பற்றி தியானிப்பது எம்மையும் எம்பார்வையையும் சீர்படுத்தும்இறைவா இன்பம் தாரும் துன்பம் தந்தால்- அதை தாங்க தெம்பு தாரும்.

### தியாகப் பாதையிலே வருகின்ற உபாதைகள் எல்லாம்....

துன்பம் வெல்லும் சஞ்சீவியை ஆய்வு கூடத்திலும் அண் டத்திலும் ஆராய்ச்சிசெய்து கொண்டிருக் கின்றது. ஆனால் துன்பம் ஓய்ந்தபாடில்லை. இச்சிறிய கட்டுரையில் துன்பத்தின் இன்னுமொரு பக்கத்தை கிறிஸ்தவ விளக்கப்புலத்திலே அலசமுனைந்தோம்.

இன்பத்தையனுபவிக்கப் படைக்கப்பட்ட மனிதன்தன் கீழ்ப் படியாமையினால் படைத்தவன் கட்டளையை மீறி பாவம் செய்தான். பாவத்தின் பயனாக துன்பத்தைப் பிரசவித்தான் என்கிறது கிறிஸ்தவம். இருப்பினும் கர்த்தரின் அருளினால் அதை ஏற்றுக்கொள்கின்ற அனைவரும் பாவத்தின் பிடியில் இருந்து மீள கடவுளே சித்தங்கொண்டதினால் பாவம் வெல்லும் மார்க்கம் கிறிஸ்தவ மார்க்கத்தில் உண்டு. இருப்பினும் இறையருள் எவர் மீதும் வலிந்து திணிக்கப் படுவது கிடையாது. வழங்குகின்ற கடவுள் வாங்கின்ற மனிதனை எதிர் பார்க்கின்றார். இறைத யாளமும் மனித சுதந்திர கையேந்தலும் இறையருளைப் பெற்றுத் தரு கின்றன.

துன்பங்கள் பலவகைப் பட்டவை. இயற்கைச் சீற்றத் தினால் துன்பம், உடல் உள குறைபாடுகளினால் துன்பம் நலக்குறைபாட்டினால் துன்பம், உறவுக்குறைபாட்டினால் துன்பம், உரிமைக்குறை பாட்டினால் துன்பம், ஓய்வுக் குறைபாட்டினால் துன்பம், பொருள் குறைபாட் டினால் துன்பம். ஆக துன்பம் அநேகமாக குறைபாட்டினால் தோற்றுவிக்கப்படுகின்ற ஒரு 'வெளியீடு' ஆக இருக்கின்றது. வானகத் தந்தை நிறைவுள்ளராக இருப்பதுபோல் நீங்கள் நிறைவுள் வராய் இருங்கள்.

வாழ்க்கை என்பது ஒரு தெரிவு, தெரிவு என்பது ஒரு தியாகம். தியாகத்தின் மறு வடிவம் விட்டுக்கொடுத்தல் அல்லது இழத்தலாகும். இலட் சியத்தை அடைவதற்கு ஏராள மான தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. தியாகப் பாதை

டையோராய் இருந்து இன்பமாக வாழவேண்டும் என்பதே இறை விருப்பு எல்லோருக்கும் எல்லாம் கிடைத்து சரியான வழியிலே மகிழ்ச்சி அனுபவிக்க வேண்டும் என்பதே இறைசித்தம். அதற்காக மனிதனும் உழைக்க வேண்டும். இறைதிட்டத்தை மெய்ப்பொருள் ஆக்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும். அந்த ஒத்துழைக்கின்ற வழியை அல்லது மார்க்கத்தை கிறிஸ்தவம் போதிக்கின்றது.

கிறீஸ்தவம் மண்ணுலகிலே நிறைவான ஒரு விண்ணுலக இராட்சியத்தை கட்டியெழுப்ப முனைகின்றது. அந்த இலட்சியப் பயணத்திலும் வழமைபோல தியாகங்களும் உபாதைகளும் உண்டு. இலட்சியப் பாதையில் எழுகின்ற துன்பங்களை குறை பாடுகளினால் வருகின்றதுன்பங் களோடு சமப்படுத்திப் பார்க்கக்கூடாது

இரண்டும் வேறு வேறானவை, வித்தியாசமானவை. தியாகப் பாதையின் உபாதைகளை, ஏற்றுக்கொள்ளுவதன் வழியாக மற்றய துன்பங்களை மேற் கொள்ள முடியுமாயின் அவை ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவையே, தாங்கிக் கொள்ளப்பட வேண்டிய வையே.

துன்பமும், உபாதையும் உலக நியதி. மனிதன் விரும்பா விட்டாலும் மானுடத்தை இறுகப் பற்றியுள்ள ஒரு வேண்டாப் பொருள். இவைகளையப்பட வேண்டும். அவை அகல வேண்டும என்பதே இறைவிருப்பு. "சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே என்னிடம் வாருங்கள் உங்களை நான் இளைப்பாற்றுவேன்" என அழைக்கின்ற ஆண்டவர் எங்கள் கவலை தீர ஆசிக்கின்றார் ஏனெனில் மனிதன் துன்பமனுபவிக்க வேண்டுமென்பது அவர் விருப்பம் கிடையாது

கிறிஸ்தவ ஆன்மீக கலா சாரம் துன்பத்தை பரந்தொரு விளக்கத்தினூடே பார்த்து வந்தி ருக்கின்றது. எழுகின்ற துன்ப துயரங்களை ஏற்றுத்தாங்கிக் கொண்டு அவற்றை இறைமகன் கிறிஸ்து மானுட இனத்தின் மீட்சிக்காக ஒப்புக்கொடுத்தது

தவம், உபவாசம், பரிகாரம், பரித்தியாகம் போன்ற உடலுக்குத் துன்பம் தருகின்ற செயல்களை தாம் வழிபாட்டு முறைகளுக் குள்ளே சேர்க்கின்றோமேயொழிய துன்ப மார்க்கங்கள் என கருதுவது கிடையாது. மாறாக. இவை ஆன்மாவிற்கு இன்பம் பயப்பவை

வறுமைப்பட்ட குடும்பத்தின் தலைவன், தன்குடும்பத்தில் பொருள்பற்றாக்குறையினால் உண்டாகின்ற துன்பத்தை தாங்கிக்கொள்ள வேண்டும். அதே வேளை அதிலிருந்து விடுபட பாடுபட்டு உழைக்க வேண்டும். அதைவிடுத்து. "ஆண்டவன் தந்தால் வேண் டத்தானே வேண்டும் என வாழாதிருக்க முடியாது. அந்த வறுமைத் துன்பத்தில் அக் குடும்பம் அழுந்தி உழல வேண்டும் என்பது இறை விருப்பமாக இருக்க முடியாது. ஆண்டவருக்குகந்த வழிகளில் வந்த துன்பத்தை வெல்லக் கூடுமாயின் முயன்று துன்பம் களைய வேண்டும்.

பாவிகளைத் தேடுகின்ற கர்த்தர் பாவங்களை விரும்புவது கிடையாது பலவீனர்களைத் தேற்றுகின்ற கர்த்தர் இயலா மையை விரும்புவது இல்லை. ஏழைகளை நேசிக்கின்ற கர்த்தர் ஏழ்மையைக் கண்டு மகிழ்வது கிடையாது துன்புறுகின்றவர்களை ஆற்றுகின்ற இறைவன் துன்பத்தில் திருப்திபடுவது கிடையாது. மாறாக மனிதன் துன்பத்திலிருந்து மீண்டும் நிறைவாழ்வு வாழ வேண்டும் என்பது அவர் திருவுளம்.

ஏழைகளே நீங்கள் பேறு பெற்றவர்கள்- எனவே தொடர்ந்தும் நீங்கள் ஏழைகளாகவே இருந்து கொள்ளுங்கள் என்பது அவரது போதனையாகாது. துயருறுவோர் பேறுபெற்றோர் ஆகவே நீங்கள் தொடர்ந்தும் துன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருங்கள் என்பது அவரது படிப்பினை யாகாது. பசித்திருப் போரே நீங்கள் பேறு பெற்றவர்கள்- எனவே தொடர்ந்தும் நீங்கள் பட்டினி கிடவுங்கள் என்பது அவர்

## கடுகுக் கதை 2
# பார்வை

திரு . அண்ணா

"அட... அட... இதிலை இருந்தால் சிக்கல் வருமெண்டு நாங்கள் எல்லாரும் வந்திட்டமடா ராஜீ, அந்த மனிசன்ர நிலமை என்னவே தெரியாது போய் ஒருக்காப் பாப்பமே!"

"உனக்கேன்ரா தேவை யில்லாத வேலை, அந்தக் காலத் திலை வழிப்போக்கன் ஒருத்தன் விழுந்திட்டான் என்று, அவனொருத்தன் தூக்கிக் கொண்டு போய் சத்திரத்தில போட்டுட்டு, சகல செலவும் தான் திரும்பி வந்து தாறன் எண்ட மாதிரி, எங்களால செய்ய முடியுமே"

"நீங்களும் ஒரு இளந்தாரிகள் எண்டு இருக்கிறியள்" இது ஒரு வயோதிபரின் குரல்

"அந்த காலத்தில உங்களைப் போல இளந்தாரியாக நான் இருக்கேக்கை, எந்த இடத்திலையும் துணிஞ்சு இறங்குவன்ரா தம்பி, நீதிக்காக குரல் எழுப்பிறதிலை என்னடா பயம், அந்தப் பரிசேயருக்கும் சதுசேயருக்கும் இயேசு நாதர் பயந்திருந்தால் சத்தியம் தழைச்சிருக்குமே. உப்பிடியே விட்டுக் கொண்டு போனியளோ, கிரந்தி முத்திப்பொவுந் திரமாகும் எண்டு எங்கட முந்தின ஆக்கள் சொன்னதைக் கேட்டி ருக்கிறன்"

"விடாத பிடி" என்ற படி இன்னொரு முதியவர் அங்கு வந்தார்.

"எட நீயும் இதுக்க வந்திட்டியே வா... வா.." எண்டு வரவேற்பு கொடுத்தார் புத்திமதி சொன்ன முதியவர்

"இல்லை.. பொடியளுக்கு நானும் சில புத்திமதிகளைச் சொல்லத்தான் வந்தனான், எட தம்பிமாரே தீமை செய்து பாடுகளை அனுபவிப்பதிலும் முடியுமானவரை நன்மைகளைச் செய்து. பாடுகளை அனுபவித்கிறது எவ்வளவோ நல்லதடா தம்பி" என்றார்.

"வாடா ராஜீ, அப்புவைப் போல துணிவு தான்ரா வேணும்" என்றதுக்கு

"துணிவு இருந்தால் போதாதடா, முதலில நாங்கள் ஒழுங்காக இருக்க வேணும் சந்தியிலும் தெருவிலும் சும்மா பெட்டை யளுக்குப் பின்னாலை சுத்திச் சுத்தி நொட்டை நொடி சொல்லுறதை விட்டிட்டு நீதிக்காக துன்பப் படத்தான்ரா வேணும் சும்மா சுத்தித் திரியிற எங்கட மற்றக் நண்பர்களுக்கும் நல்லதைச் சொல்லுவோம!"

## தடைசெய்தல் முறையாகுமோ?

- வஸன் -

குறைகாணும் குணத்தாலே
குறைகின்றதே நம் உறவு
நிறைகண்டு போற்றிதற்கு
நிறைந்த மனம் வேண்டுமய்யா:

தரம்தேடி அலைகின்றோம்
தரம்மேவே ஏது செய்வோம்?
வரம் வேண்டும் பொழுதெல்லாம்- பிறர்
நலம் வேண்டி தொழுதிடுவோம்.

எதிர்பார்பு பலவாக
ஏங்கி நிற்கும் நம் வாழ்வு-பிறர்
எதிர்பார்பை மதிக்காமல்
தடை செய்தல் முறையாகுமோ?

கேட்கும் வரம் கிடைக்க வேண்டும்
நினைப்பதெல்லாம் நடக்க வேண்டும்- என
ஏங்கும் மனித வாழ்வுதனில் - பிறர்
ஏற்றம் பெற உழைத்திடுவோம்.

நற்செய்தி பணிகளிலே
நாமெல்லாம் இணைந்திடுவோம்
நற்சேவை செய்திடுவோம்
நன்றி சொல்லி வாழ்ந்திடுவோம்.

## ஐக்கியம் கிடைத்தாலே..

அதாவது நான் அங்கலிக்கன் வாலிபர்கள் எல்லோரையும் மெத டிஸ்த திருச்சபைக்கு வாருங்கள் என்றோ மெதடிஸ்த வாலிபர்களை அங்கலிக்கன் சபைக்கு போங்கள் என்றோ கூறவில்லை. வேறுபாடுகள் உடன் எவ்வாறு ஒற்றுமையாக செயற்படலாம் என்பதே கருத்தில் கொள்ள வேண்டும்.

வேறுபாடுகள் வித்தியாசங்கள் இறை வனால் வழங்கப்படுகின்ற ஒன்று. இவ் வித்தியாசங்களின் மத்தியில் ஒற்றுமையை கட்டி யெழுப்புவது அவசியம். இதைத் தான் இவ்வொன்றுகூடல் வலியுறுத்துகின்றது என்றார். இவ் ஓன்றுகூடலில் 110 வாலிபர்களும், அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

## வழிகாட்டிகளே நல்லதை...

தாக்கங்களை உண்டுபண்ணுகின்றது. எமது ஆளுமைத்தன்மையின் அடிப்படையில் நாம் பிறரை அடையாளம் காணப்படுவதும் தங்கியுள்ளது. நாங்கள் எமது அனுபவங் களையும் உணர்வு களையும் பிறருடன் எப்பொழுதும் பகிர்ந்து கொண்டாலும் பகிரப்படாத பல அம்சங்கள் நாங்கள் மறைத்து வைத்திருக் கின்றோம்.

மேலும் எங்களை நாங்கள் அறிந்து கொள்ளாதபடி சில குருட்டுத் தன்மைகள் எங்களில் காணப்படுகின்றது. இவற்றை நாம் இனம் காணவும் அத்துடன் தனிநபர் ஐக்கியத்தை கட்டி எழுப்பவும் அதனூடாக சமூக ஐக்கியத்தையும் கட்டியெழுப்பவும் உதவுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும், யாழ் மாவட்ட Y.M.C.A தலைவரும், யாழ்ப்பாண Y.M.C.A தலைவரும், யாழ் கிறிஸ்தவ ஒன்றிய உபதலைவரும், சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் ஆலய செயலாளரும், வெவ்வேறு காலங்களில் யாழ். கிறிக்கற் மத்தியஸ்த குழுத் தலைவர், செயலாளராகவும், இந்தியா, அவுஸ் திரேலியா, கொழும்பு போன்ற கிறிக்கட் அணியினருக்கு நடுவராக பணியாற்றி வரும், சமாதானத்துக்கும் நல்லெண்ணததுக்குமான தலைவருமாகிய திருவாளர் D.R. அருமை நாயகம் அவர்கள் தெளிவுக்கு தந்த சிறப்புச் செவ்வி இதோ....

# பெற்றோர் - ஆசிரியர் நல் ஆர்வமே நல்ல சமூகத்தை உருவாக்கும்

— திரு. D.R. அருமைநாயகம் —



**தெளிவு வாசகர்களுக்கு உங்கள் சமூக - சமய பணிகள் பற்றி கூறமுடியுமா?**

பிளவுபட்டிருக்கின்ற எமது தேசத்தில் சமாதானத்தையும், ஒப்புரவாகுதலையும், இனங்களுக்கிடையிலும் - மதங்களுக்கிடையிலும் ஏற்படுத்துவதற்காக என்னை அர்ப்பணித்து பணியாற்றுவதோடு, பிளவுபட்டுள்ள எமது திருச்சபைகள் அனைத்தும் ஒன்றாக ஒரே உடலாக செயற்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக திருச்சபை ஐக்கியங்களுக்காகப் பாடுபடுகின்றேன்.

முழு மனித விடுதலையை ஏற்படுத்தும் வகையில் கல்வி - பொருளாதார - சமூக மேம்பாட்டிற்காக Y.M.C.A யின் ஊடாக செயலாற்றி வருகின்றேன். எமது சொந்த கலாச்சாரங்களை அடையாளம் கண்டு அவற்றை வளர்க்கும் வகையிலும், ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தையும் மனதில் கொண்டு உழைத்து வருகின்றேன். அத்தோடு திருச்சபையில் குருவானவர்களையும் மக்களையும் இணைக்கும் ஒரு பாலமாகவும் செயலாற்றி வருகின்றேன்.

**பொதுச்சேவையில் ஈடுபடத் தூண்டிய அனுபவங்களை பகிரமுடியுமா?**

என்னுடைய தனிப்பட்ட குழந்தைப் பருவ வாழ்வில் பல இன்னல்களுக்கூடாக சென்ற படியினால் துயர் உள்ள மக்களை புரிந்து கொள்ளவும் அவர்கள் துயரங்களை துடைக்க வேண்டு மென்ற ஆசை எனக்கு ஏற்பட்டது. எனது இளமைக்கால வாழ்வில் குடும்ப உறவில் ஏற்பட்ட தாக்கம் எல்லோரையும் எனது சகோதரர் களாகவும், சகோதரிகளாகவும், பிள்ளைகளாகவும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை தந்தது.

எனது பாடசாலை நாட்களில், குறிப்பாக விடுதி வாழ்க்கையில் நான் பெற்றுக் கொண்ட தலைமைத்துவ அனுபவங்களும் தொடர்ந்தும் என் பணியில் செல்வாக்கு செலுத்தியது. இப்பணிகளை நான் சுயநலத்தையோ பெயர் புகழையோ பாராமல் பொதுநலத்தை மையமாகக் கொண்டு செயற்பட உதவியது.

**சமய வழிகாட்டலில் மக்களின் ஆன்மீகத் தேடல் திருப்தியைத் தருகிறதா?**

**இக்கால ஆன்மீக தூண்டல் வளர எவ்வழிகளில் சாத்தியமாக்கலாம் என எண்ணுகிறீர்கள்?**

ஆன்மீகத் தேடல் என்பது ஓரளவுதான் திருப்தியைத் தருகின்றது. ஆனால் அதுவும் இன்று பூரணமாக இல்லை என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது. ஏனெனில் எமது சமூக - பொருளாதார - அரசியல் பிரச்சனைகளை கடவுள் துணையின்றி எம்மால் தீர்த்துக் கொள்ளமுடியும் என்ற எண்ணம், துன்ப துயரங்களில் மட்டும் இறைவன் மேல் நம்பிக்கை வைக்கும் போக்கும், மனித வாழ்வில் இறைவனின் செல்வாக்கு எந்தளவுக்கு இருக்கின்றதென்ற சந்தேகமும் மேலோங்கி இருக்கின்றது.

எனவே ஆன்மீகத் தூண்டலால் வளர அருளுரைகள் ஆற்றும் குருக்கள் யதார்த்த பிரச்சனைகளை முன்வைத்து நற்செய்தி பகிர்வதன் மூலமும், வேதப் படிப்புக்களை நடாத்தி ஆன்மீக தேடலை ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் வாலிபர்களுக்கான பயிற்சி பாசறைகளை ஒழுங்கு படுத்தப்பட்ட முறைகளில் நல்ல தலைமைத்துவத்தை வளர்க்க கூடியதாகவும், நற்பயன் பெறக்கூடிய விதத்திலும் நடாத்துதல் வேண்டும். பொதுப் பணிகளில் ஈடுபடத் தூண்ட வேண்டும்.

அத்துடன் மிக முக்கியமாக சிறுவர்கள் மட்டத்தில் ஆன்மீகத் தூண்டல் விதைக்கபட வேண்டும். வீட்டிலும் சரி, ஓய்வுநாட் பாடசாலைகளிலும் சரி ஆன்மீகம் சொல்லும் செயல் வடிவம் கொடுக்கப்படும்போது அவர்கள் வளர்ந்து வரும் காலத்தில் அவற்றை பிரதிபலிக்க அதிக சாத்தியக் கூறுகள் இருக்கின்றது.

பெற்றோர் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதில் இருக்கின்ற உற்சாகம் ஆன்மீகத் தேடலுக்கு இல்லாது இருக்கின்றது. இதனால் அப்பிள்ளைகள் எதிர்கால வாழ்வில் பெயரளவில் கிறிஸ்தவராக இருப்பாரே தவிர தனது வாழ்வில் பிரதிபலிக்கும் கிறிஸ்தவராக இருக்கமாட்டார். எனவே ஆன்மீக தூண்டல் சிறுவர்கள் மட்டத்தில் அதிகமாக விதைக்கப்பட வேண்டும்.

**ஆங்கில கல்வியின் வளர்ச்சி, எம் மக்களின் ஆர்வம் எப்படி உள்ளது? ஆங்கில கல்வியின் முக்கியத்துவம் வளர ஏற்படுத்தும் முயற்சிகள் எவை?**

எம் மக்கள் தமது சொந்த மொழியில் நாட்டம் காட்டாத தன்மை இன்று இருக்கின்ற அதே நேரம், ஆங்கில மொழியில் மிகவும் மந்த நிலையிலே காணப்படுகின்றது.

ஆங்கில கல்வியை வளர்க்க வேண்டுமென்றால் பாடசாலையில் ஆங்கில பாடவேளையில் அவ்வாசிரியர் ஆங்கிலத்தில் உரையாடல்களை மேற்கொள்ளல், பாடசாலைக் கூட்டங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் நடாத்துதல் மற்றும் வீடுகளில் செய்திகள் - தொலைக்காட்சி - உரையாடலீகள் - பத்திரிகைகள் - வானொலி முதலியவற்றின் ஊடாகவும் ஆங்கில அறிவை வளர்க்க முடியும். இவற்றுக்கு பெற்றோரினதும் - ஆசிரியரினதும் ஆர்வமே நல்ல சமூகத்தை உருவாக்கும்.

**பொதுப்பணிகளில் ஈடுபட இளையோருக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் எவை?**

சுயநலம், பெயர், புகழ், பதவி, மோகம் கொண்டு காரியங்களை முன்னெடுக்காமல் நேர்மைத் தன்மையும் விடாமுயற்சியும் மற்றவர்களின் நலனில் அக்கறையும் கரிசனையும் எப்போதும் கொண் டிருக்க வேண்டும். செய்கின்ற பணிகளுக்கு எந்தவிதமான பிரதி உபகாரங்களையும் எதிர்பாராமல் இருத்தலும், நீண்ட பொறுமையும், தூர நோக்கு பார்வையும், புத்தாக்க தன்மைகளும் கொண்டிருக்க வேண்டும். மற்றவர்களிடம் இருந்து வருகின்ற விமர்சனங்களை ஏற்றுக் கொண்டு திருந்தக் கூடியதை திருத்தி மற்றவர்கள் சொல்லுகின்ற விடயங்களை பொறுமையாக செவிசாய்க்கின்ற குணத்தையும் வளர்த்தல் நல்ல தலைவர்களை உருவாக்க ஊக்குவிக்கும்.

**'தெளிவு' வாசகர்களுக்கு நீங்கள் பகிர விரும்புவது?**

தெளிவு பத்திரிகை சமூக பொருளாதார அரசியல் மத செய்திகள் உள்ளடக்கி இருப்பது போற்றத்தக்கது. அத் துடன் இது எல்லா வயதினரையும் உள்ளடக்கிய ஒன்று குறிப்பாக சிறுவர்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

தெளிவின் ஆக்கங்கள் குறிப்பிட்டொரு சபை எல்லைகளைக் கடந்து பிற சபைகளிடமிருந்தும் பெறப்படுவது வரவேற்கத்தக்கது. ஆக்கங்கள் தொடர்பாக வாசகர்கள் அனுப்பும் கடிதங்கள் திருப்தியைத் தருகின்றது. எமது சபைகள் இதற்கு கொடுக்கின்ற ஊக்குவிப்பு போதாமை பெரும் குறையாகும். எனவே இவற்றை நிவர்த்தி செய்ய சபைகள் முன்வர வேண்டும். தூர நோக்குடன் தெளிவு தனது பாதங்களை முன்னெடுத்து சென்று அனைவருக்கும் ஆன்மீகத் தெளிவை கொடுக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

# மனிதத்தைத் தேடும்தேசம்

சூரிய வெப்பத்தில்
சுட்டுப் போகும் கொடூரம்
இருதயம் ரணம் சொட்டும் மனம்
இன்றின் என் துன்பியல் வாழ்வு.

மனுஷப் பாசை மறந் போக
ஆயுதப் பாஷை நிறைந்து நிற்கும்
பு'கோலத்தில் போர்க்களத்தில்
அமைதி தேடலாகி பயணிக்கும்.

ஊன் உணர்வுகள்ள உயிர்ப் பெடுக்கும்
சாதி மத இனச்சமர்கள்
அகிலத்தில் அனைத்து இயற்கையிலும்
வெடிக்கும்
உண்மைகள் ஊனப்பட்டு உறக்கம்
கொள்ளும்

ஈரம் வற்றிய சனம்களின் ஜனனம்
முரண்பாடுகளே முட்டையாகும்
மனிதத்தை தேடும் தேசம்
நீசத்தை வேண்டும் தீர்வு
அர்தப் புஷ்டியிழக்கும் வாழ்வு.

என் நிலை என்னவென்று
நான் சொல்ல எல்லாமே
வெறி வரிந்து கிடக்கையில்
வீதிகளில் எப்படி சந்தோஷிப்பு
பொழியும்!?

எம். பீ. நஸீம்
ஓட்டமாவடி

## புதிய பிரதம பேராயர்...

தமது 52வது வயதில் 104வது கண்டபறி பேராயராக நியமனம் பெற்ற அதி. வண. டாக்டர் றோவான் வில்லியம்ஸ் ஆண்டகை 2003 ஆம் ஆண்டு முற்பகுதியில் சென். கெஸ்டீன் ஆசனத்தில் முடிசூட்டப்படுவார்.

சவால்கள் நிறைந்த இவ்வுலகில் எங்குபார்த்தாலும் யுத்தங்கள் வன்முறைகள் - சமயத்தின் பேரால் பூசல்கள் - அடக்குமுறைகள் - சிறுவர் துஷ்பிரயோகங்கள் - பாலியல் வன்முறைகள் நம் முன்னேரிலிருந்து இருக்கின்றன. இவற்றின் மத்தியில் சிறந்த பணியாற்ற தூய ஆவியரின் வழிநடத்தல் என்றும் இருக்க வேண்டும் என்று செபிப்பதோடு பேராயரின் பணி சிறக்க தெளிவின்மூலம் வாழ்த்துகின்றோம். அதே நேரம் கடந்த 12 வருடங்களாக பிரதம பேராயராக பணியாற்றிய பேராயர் அதி. வண. னுச. ஜோக்கேரி ஆண்டகையையும் நன்றி உணர்வுடன் நினைக்கின்றோம்.

# அகிம்சையின் புதிய பரிணாமம் மாட்டின் லூதர் கிங்

— வண. சா.பி. கிருபானந்தன் —

"எதிர்ப்பை காட்டுவதைத் தவிர மாற்று வழியேதும் இல்லை. நாம் ஆழமான பொறுமையை கடைபிடித்தோம். நாம் நடத்தப்படும் விதத்தை நாங்கள் விரும்பியதாக வெள்ளை சகோதரர்கள் சில வேளைகளில் எண்ணும்படி நடந்தோம். இன்று எமது பொறுமையிலிருந்து விடுபட்டு எந்த விதத்திலும் குறைவுபடாத பொறுமையாக உருவாக்குவோம்"

என்று மொன்ரோகெமரி நகரப் பேருந்துகளில் நிறப்பாகுபாட்டை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்திற்கு தலைமை வகுத்து இவ்வாறு பேசினார். அமெரிக்க வரலாற்றில் புதிய குரலை எழுப்பி குடியியல் உரிமைக்கான போராட்டத்திற்கு அர்த்தமிகு சொல்லடலையும் தூண்டுதலை தரும் ஆளுமையையும் தந்தவர் மாட்டின் லூதர் கிங். நகரப் பேருந்துகளில் நிறப்பாகுபாடு காட்டுவது நிறுத்தப்பட வேண்டும் என ஒத்துழையாமை இயக்கத்தை கட்டியெழுப்பினார். ஒரு வருடமும் சில வாரங்களின் பின் இவர்களது கோரிக்கை வெற்றி கண்டது. அவரது வீடு தகர்க்கப் பட்டது. அவரது குடும்ப பாதுகாப்பு கேள்விக் குறியானது. அவரது போராட்டம் தொடர்ந்தது.

காந்தியின் அகிம்சை தத்துவத்தால் கவரப்பட்டு கறுப்பின மக்களின் விடுதலையை வழி நடத்தியவர். எமது துன்பியல் அனுபவத்தால் உணர்ந்துற்றோம். எந்த ஆதிக்கவாதியும் சுயச்சையாக சுதந்திரம் தருவதில்லை. ஒடுக்கப் படும் மக்களால் அழுத்திக் கேட்கப் பட வேண்டும் என கறுப்பின மக்களின் அகிம்சைப் போராட்டத்தை அர்த்தப்படுத்தினார்.

பேச்சு வன்மைமிக்க பப் டிஸ்ட் சபை போதகர், 1950 நடுப் பகுதியிலிருந்து 1968 படுகொலை மட்டும் குடியியல் உரிமை இயக்கத்தை வழிநடத்தினார். வாசிங்கடனில் நடந்த பாரிய ஊர்வலம் ஒத்துழையாமை இயக்கத்தின் போக்கை நிர்ணயித்தது. அவரது திறமையான தலைமைத்துவத்தாலும் பேச்சு வன்மையாலும் கறுப்பின மக்கள் மீது திணிக்கப்பட்ட சட்ட ரீதியான இனப்பாகுபாடு தென் பகுதியிலும் பின்னர் அமெரிக்கா முழுவதும் முடிவுகட்டப்பட்டது.

# உங்கள் இலக்கு எவை?

வாழ்க்கையை முழுமையாக அர்த்தமுள்ளதாக ஒருவர் வாழ்வதற்கு இலக்குகள் நிர்ணயிப்பது என்பது இன்றியமையாத செயற்பாடாகும்.

உள ஆரோக்கியம் கொண்ட மனிதன் சிந்திப்பதற்கு நேரம் எடுத்து, தனது உளத்தை ஆராய்ந்து, தனது திறமை ஆற்றலுக்கு ஏற்ப குறுகிய நீண்ட கால இலக்குகளை அமைத்து அதனைச் செயல்படுத்துவதற்கு திட்டங்கள் தீட்டுகிறான். இதனால் சிந்தனை சிதறாமல் மனத்தை ஒருமுகப்படுத்தி காரியத்தை முடிப்பதற்கான தன்னம்பிக்கை அவனிடம் உருவாகின்றது.

"நம்முடைய திட்டங்கள் தவறாகிவிடுகின்றன, இலக்கு இல்லாதபோது; எந்தத் துறை முகத்தை சென்று அடைய வேண்டும் என ஒருவனுக்கு தெரியாதபோது, காற்று எந்தப் பக்கம் வீசினாலும் அது சரியான காற்றாக இருப்பதில்லை" என்ற ரோமானிய அரசியல் மேதை செனகாவின் கருத்துக்கு ஏற்ப, இலக்கு இல்லாதவர்கள் எதிர்கால திட்டம் இல்லாமல், உணர்வு அற்றவர்களாக எங்கே பயணம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கூட அறியாமலே நடந்து கொண்டிருக்கிறார்கள்.

"நீங்கள் இப்ப என்ன செய்யிறீங்கள்" என்பதற்கு இலக்கில்லாதவர்கள் சொல்லிக் கொள்ளும் பதில்

"சும்மா இருக்கிறன்"

"படிச்சவனுக்கே வேலை இல்லையாம், நமக்கு யார் வேலை தரப்போறான்"

"வெளிநாட்டில இருக்கிற எங்கட அண்ணா, ஏதாவது சொல்லும் மட்டும் இப்படியே இருக்க வேண்டியதுதான்"

"இப்ப எல்லாரும் கொம்பியூட்டர் படிக்கிறபடியால், நானும் கொம்பியூட்டர் படிக்க யோசிக்கிறன்"

**மருந்தில்லா மருத்துவம்**
**- ராதி -**

இவ்வாறு மற்றவர் சொல்லி செய்பவர்களாக எல்லாரும் செய்யினம் தாமும் செய்து பாப்பவர்களாக, வாழ்வில் நம்பிக்கை இல்லாது, ஏனோ தானோ என்று இருப்பவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் வாழ்வில் ஒரு போதும் வெற்றிகாணமுடியாது.

"இலக்குகள் இல்லாதவர்கள், இலக்குகள் உள்ளவர்களாக என்றென்றும் ஊழியம் செய்கின்றவர்களாக ஆகிவிடுகின்றார்கள்" இவ்வாறு பிரயன் ட்ரேசி என்பவர் இலக்கமைக்காதவர்களின் நிலைபற்றி கூறுகின்றார்.

இலக்கமைக்காதவர்கள் தமது வாழ்வியலுக்கான அர்த்தம் புரியாதவராக - தூர நோக்குடன் செயற்படாதவராக– உளதிடகாத்திரம் அற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்களே சமூகத்தில் மது அருந்தி – புகைபிடிக்கு களவுக்காக கொலையும் செய்து – பாலியல் துற்பிரயோகத்தில் ஈடுபட்டு – வன்முறைச் செயலுக்கு துணைபோய் - சந்திகளில் இருந்து 'கூ' அடிப்பவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் தம்மைப் பற்றி குறைத்து மதிப்பிட்டு சமூகத்தில் இருந்து விலகி செல்கின்றார்கள். இந்த விலகல் நடத்தைக்கு காரணம் இலக்கமைத்து திட்டமிட்டு வாழாதது ஆகும்.

ஆகவே எமது வாழ்வில் உண்மைத்துவம் விளங்க வேண்டும் என்றால், மற்றவர்கள் எமது இலக்குகளை நிர்ணயிப்பதைவிட, நாமே எமது இலக்குகளை எமது ஆற்றலுக்கு ஏற்ப குறுகிய – நீண்ட கால இலக்குகளை எமக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அதிக சக்தியை பெற்று ஆழ்மனம் அதை நோக்கி தன்னம்பிக்கையோடு திட்டமிட்டு செயற்பட தூண்டும். இலக்குகள் தெளிவாகி கொண்டால் எமது ஆழ்மனம் எம்மை சரியான வழியில் முன்னோக்கி நகர்த்தி செல்லும் இதனால் வாழ்வில் வெற்றி காணமுடியும்.

இப்போது எனது இலக்கு என்ன? சற்று சிந்தித்து இலக்கை நிர்ணயிக்கவும், அதற்கான கால எல்லைகளையும் நிர்ணயிக்கவும், அதற்கான தடைகளையும், சவால்களையும் தாண்டிச் செல்லவும், திட்டமிடவும் இப்போ இலக்கை நோக்கிய பயணத்திற்கு தயாராகிவிட்டீர்களா!

# தெளிவுப் பெட்டகம்

**ஐக்கியத்தை விரிவுபடுத்துகின்றது**

தெளிவின் அனைத்து இதழ்களையும் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இலகு நடையில் பல்வேறு திருச்சபை ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட செய்திகள், கட்டுரைத் தொகுப்புக்கள் கிறிஸ்தவ ஐக்கியத்தை விரிவுபடுத்துவதுடன் இனிமையாகவும் இருக்கின்றது.

தெளிவில் மிளிரும் ஆக்கங்கள் தனித்து இறையியலாளரிடம் மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பகுதியிலுள்ள சமூக கலாச்சார விழுமியங்களுடன், ஆர்வமுள்ளவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இன்னும் தெளிவை தெளிவடைய இலகு வழி சமைக்கும்.

தெளிவின் தெளிவு தெளிவே !!

ஆ. சுகந்தன்
தெமடிஸ்த திருச்சபை, மன்னார்.

**தேவை தெளிவு**

தெளிவு பத்திரிகை கிடைக்கப்பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. தற்சமயம் எம் மக்களிடையே மிகவும் அத்தியாவசியமானது தெளிவு. இதை உங்கள் பத்திரிகைக்கு தலைப்பாக்கிக் கொண்டமைக்கு எமது வாழ்த்துக்கள். தெளிவின் ஆக்கங்கள் காத்திரமானது. மேலும் தெளிவு பத்திரிகை வளர்ந்தோங்க வாழ்த்துகிறேன்.

மோகனா பிரபாகரன
தமிழ் இணைப்பாளர், சமூக விஞ்ஞானிகள் சங்கம்,
கொழும்பு - 09.

**கடுகு சிறிதானாலும் . . .**

ஆண்டு மலர் தெளிவுகண்டு ஆனந்தம் அடைந்தோம். கடுகு சிறிதானாலும் காரம் பெரிதென்பர். அதனைத் தெளிவில் கண்டோம்.

நாட்டு நடப்புடன் நற்செய்திகள் பகிர்ந்து காட்டிடும் நல்வழிக்கு கதை, கவிதை, கட்டுரையும், வரலாற்றுப் பதிவுகளும், வாழ்த்துரையும், நற்பணியாளரை செவ்வியுடன் அறிமுகம் செய்து வாழும்போது வாழ்த்தும் நற்பண்பை தெளிவில் கண்டு மகிழ்கின்றோம்.

நற்செய்தி வழிநின்று
நற்தெளிவூட்டி வளரும்
நற்பணி வாழ்க பல்லாண்டு - என
மனதார வாழ்த்துகின்றோம்.

கீத. கியோமர், நண்பர்கள்,
கல்வியல் கல்லூரி, மட்டுநகர்.

"உங்கள் பகைவிடமும் அன்பு கூருங்கள்" மத்.6:44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய கதை

என் பெயர் விவிலியம். உங்களில் சிலர் நான் ஒரு சாதாரண புத்தகம் என நினைக்கிறார்கள். இல்லை, நான் ஒரு சாதாரண புத்தகம் அன்று. ஏனென்றால் எனக்காகப் பலர் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர். பலர் உயிரோடு எரிக்கப்பட்டிருக்கின்றனர். பலர் நாடு கடத்தப்பட்டிருக்கின்றனர். பலருடைய சொத்துக்கள் பறிக்கப் பட்டு வேட்டையாடப்பட்டிருக் கின்றன. இதெல்லாம் எதற்காக? இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இறைவார்த்தை பாப்பிரஸ் சுருள் மற்றும் தோல் சுருள்களில் எழுதப்பட்டிருந்த கால கட்டத்தில் நான் எளிய மக்கள் கைகளிலும் போய்ச்சேர வேண்டும் என பெரு முயற்சி எடுத்தனர். இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட நூல் குருக்களால் மட்டும் பயன்படுத்தப் பட்டு வந்தது. இதைச் சாதாரண மக்கள் படிக்கவோ அதற்கு விளக்கம் கூறவோ முடியவில்லை. சாதாரண மக்கள் இறைவார்த்தையைப் படிப்பதற்குப் பெரும் தடைகள்!

1832ஆம் ஆண்டு விவிலியம் எனும் என்னை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முயன்ற ஜான் விக்லிப் என்பவர் கிறிஸ்தவ மதத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் அவர்தம் எலும்புகள் கல்லறையிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுச் சாம்பலாக எரிக்கப்பட்டு ஆற்றில் எறியப்பட்டன. ஏன் இந்தக் கொடுமை? ஏனென்றால் எளிய மக்கள் ஆன்ம விழிப்புணர்வு பெற்றனர்.

இறைவன் வில்லியம் டிண்டேல் (1494 - 1536) என்பவரைத் தூண்டி விவிலியம் எனும் என்னை எபிரேயம் மற்றும் கிரேக்க மொழிகளிலிருந்து மொழி பெயர்க்கச் செய்தார். இதனால் அவர் துன்புறுத்தப்பட்டார். இங்கிலாந்திலிருந்து தப்பி ஹம்பர்க், கொலோன் மற்றும் வோம்ஸ் ஆகிய நகர்களுக்கு ஓட நேர்ந்தது. இதற்கிடையில் அச்சடிக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. முதன் முதலில் புதிய ஏற்பாடு நூல்கள் அச்சடிக்கப்பட்டு, பருத்தி, பஞ்சு கட்டுகளுக்குள் மறைக்கப்பட்டு இங்கிலாந்துக்குள் கடத்தப்பட்டன. புரிந்து கொள்ளாத குருக்களின் அவை தங்கள் பிரதிநிதிகளைப் பருத்தி வியாபாரிகள் என்ற போர்வையில் அனுப்பி டிண்டேல் என்பவரைக் கண்டுபிடித்து இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தனர். 1536ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் திகதி அவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டு மரத்தில் கட்டி எரிக்கப்பட்டார். அவர் எனக்காக எத்தகைய தியாகம் செய்திருக்கிறார் என்று பாருங்கள். அவர் செய்த ஒரே குற்றம் புதிய ஏற்பாட்டு நூல்களைப் பாமர மக்கள் கைகளில் சேர்த்ததுதான். நீங்கள் இதை உணர்கிறீர்களா?

இறைவன் இம்மொழி பெயர்க்கும் பணியை ஜேம்ஸ் மன்னரின் (1611) அனைத்து கையெழுத்துப் பிரதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து மொழி பெயர்க்கும்படி மன்னர் கட்டளை யிட்டார். இப்பிரதிகள் அனைத்து ஆலயங்களிலும் படிப்பதற்கும் போதிப்பதற்கும் வைக்கப்பட்டு இன்றும் மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளது. ஆனால் நான் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய அளவில் உள்ளேனா? இல்லை. இன்றும் இல்லை. முதல் நூற்றாண்டிலேயே இயேசுவின் சீடர் தோமா மேற்கத்திய கடற்கரைக்கு வந்திறங்கிய போதிலும் 1728இல் பார்த்தலோ மேயஸ் சீகன்பால்க் (1862 - !719) என்னைத் தமிழில் மொழிபெயர்த்தார். நான்தான் முதல் முதலாக இந்தியாவில் அச்சடிக்கப்பட்ட புத்தகமாகும். பிறகு வில்லியம் கேரே (1761 - 1814) 40 வடஇந்திய மொழிகளில் என்னை மொழிபெயர்க்கச் செய்தார். உலகில் 6500க்கும் அதிகமான மொழிகள் உள்ளன. அவற்றுள் 1650 மொழிகள் இந்தியாவில் உள்ளன. அவற்றுள் 176 மொழிகளில் நான் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இடம்பெற்றுள்ளேன்.

மேலும் 1995இல் திருவிவிலியம் என்ற பெயரில் நான் வெளியிடப் பட்டேன். 2001இல் சுமார் 6 இலட்சம் பிரதிகள் தமிழ் கூறும் நல்லுலகில் வினியோகமாகி இருக்கின்றன. இருப்பினும் என்னைச் சிலர் குறை கூற வேண்டுமென்றே விளைகின்றனர்.

இன்னும் இலட்சக் கணக்கான மக்களுக்கு என்னைப் பற்றிய ஒரு பகுதிகூட தெரியாதபடி 1400க்கும் மேற்பட்ட மொழிகள் இவ்வுலகில் உள்ளன. இயேசு கிறிஸ்து வழியாக அன்றி மீட்பு விடுதலை இல்லை என்று உங்களுக்கு நன்கு தெரியும். நற்செய்தியை அறியாத நிலையில் மக்கள் இயேசுவை அறிந்து கொள்ள முடியாது. விவிலியம் எனும் நான் எப்படி அவர்களை அடைய முடியும்? நீ விரும்பினால் உன்னால் முடியும்.

- நீ வாழும் பகுதியில் விவிலியக் குழு ஒன்றைத் தொடங்கியுள்ளதாக அறிந்து மகிழ்கிறேன். நன்றி.
- ஒரு செபிக்கும் பங்காளியாக என் விவிலியப் பணிக்காக தினம் செபி.
- மொழிபெயர்ப்புப் பணியில் உற்சாகமான உறுப்பினராக இருந்து பிறர்க்கு விவிலியம் வழங்கு.
- யாருக்கு விவிலியம் அளிக்கிறாயோ அந்தக் குடும்பத்திற்காகச் செபித்தல் . . . அவர் பிற மதத்தவராகக் கூட இருக்கலாம்.

நான் உன்னை இப்புனிதப் பணியில் ஒரு உண்மையுள்ள உறுப்பினராக சேர்க்கலாமா?

**இப்படிக்கு**
**திருவிவிலியம்**
**நன்றி - தோழன்**

## இயேசு திருவடி அமர்ந்து...!

**உலகம் விடிய வேண்டுமே**
**சமாதானம் மலர வேண்டுமே – இதற்கு**
**ஏங்குதையா அனைத்து மனமுமே!**
**மங்கிய விழியில் மங்கலாய் தெரியுதே**
**மலரப் போகும் சமாதானம் – அதற்கு**
**மனங்கள் இணைய வேண்டும்**
**சாதிமதபேதம் மறைய வேண்டும்**
**மன்னவன் அருள்பொழிய வேண்டும்**
**மாண்புறு வள்ளல் யேசுதிருவடி**
**அமர்ந்து ஆசிர்பெற வேண்டும்!**

***கலைப்பிரியன***
***பெரியவிளான்***

## அன்பு

அன்பு என்னும் மூன்றெழுத்து
அமைய வேண்டும் உன்னிடத்தில்
அன்பு கூற வந்துள்ளேன்
அன்பாக உங்களிடம்

இறைவன் தந்த அன்பை
இணைந்து வாழப் பழகிடுவோம்
அன்பு இன்று உருவாக
இளைஞர்களே வந்திடுவீர் .

இதமாய் இறைவன் புகழ்பாடி
நெஞ்சில் அவனை இருத்திடு
அன்னையை மதித்து போற்றிடு
அவள் அன்பை என்று நினைத்திடு

அன்பென்றும் வாய்ச் சொல்
நெஞ்சினில் இல்லையேல்
உன் நெஞ்சினில் வஞ்சனைகள்
குடிகொள்ளுமே!

***செ. செபஜீவன்***
***சென் பற்றிக்ஸ் கல்லூரி.***

## நிலையாமை

*காசு காசு என்றெதற்கும்*
*பேசுகின்ற மனிதர்காள்*
*மனம் தனிலே அமைதிதர*
*காசுக்காற்றல் உள்ளதோ?*

*நான் நான் என்றெதற்கும்*
*பேசுகின்ற மனிதர்காள்*
*நாளைக்கே நீர் இறந்தால்*
*உலகமென்ன அழியுமா?*

*தேவை தேவை என்றெதையும்*
*சேர்க்கின்ற மனிதர்காள்*
*இன்றிரவே நீர் மறைந்தால்*
*சேர்த்த பொருள் யாருக்கு?*

*புகழ் புகழ் என்று நிதம்*
*ஓடுகின்ற மனிதர்காள்*
*இறைபுகழே அழியாது*
*என்பதுமக்குத் தெரியுமா?*

*நீர்க்குமிழி போன்றதுதான்*
*வாழ்க்கையது மனிதர்காள்*
*மனம் தனிலே அமைதிதர*
*இறையினை நீ தேடிடு.*

**வண. S.D.P. செல்வன்**

## சமாதானம் மலரட்டும்

**பாலர் நாம் மகிழ்ந்திட**
**பாரினில் சிறந்து ஓங்கிட**
**பரமன் இயேசு வழிதொடர**
**பாரில் மலரட்டும் சமாதானம்!**

**இம்மையில் வாழும் மனமுடைந்த**
**உள்ளங்களிலே**
**இன்பங்கள் பொங்கி வழிந்திட**
**இறையேசு அளித்த உண்மை**
**சமாதானம்**
**இன்றே மலரட்டும் இவ்வுலகில்!**

**சாதி இன பேதங்கள் ஒழிந்து**
**சாந்தமும் தாழ்ச்சியும் மலர**
**சாவான பாவங்கள் நீங்கிட**
**சாவற்ற சமாதானம் மலரட்டும்.**

குயின்மேரி தோமஸ்
ஆண்டு 10
திருக்குடும்ப கன்னியர் மடம

## வேண்டும்

**கள்ளங்க்ள் நீங்கி**
**கானங்கள் ஒலிக்க**
**வேண்டும்**
**கவலைகள் நீங்கி**
**கல்வியில் நனைய**
**வேண்டும்.**

**பற்றைகள் அழிந்து**
**பசுமை பெற வேண்டும்**
**அனர்த்தங்கள் நீங்கி**
**ஆனந்தமாய் வாழ**
**வேண்டும்.**

**ஊழல்கள் நீங்கி**
**உரிமைகள் பெறவேண்டும்**
**இளையோரின் எதிர்**
**பார்ப்பு**
**இனிதே நிறைவேற**
**வேண்டும்.**

**கி. கிறிஸ்டின் டிஷானி**
**யா / புனித சாள்ஸ் ம.வி.**

# "தர்மம்" - குட்டிக்கதை -

**யோ. காருணி**
**யாழ்/திருகுடும்ப கன்னியர் மடம்**

போர் தொடங்கிய காலம் முதல் விவசாயியாய் இருந்த சந்திரன் தன் தோட்டத்தில் விளையும் பொருட்களில் பலவற்றை சந்தைக்கு விற்க செல்வான். அவனது வருவாயில் ஒரு பகுதியை மரக்கறி தானியங்களை சந்தைக்கு செல்லும் வழியில் உள்ள அகதிமுகாமில் கொடுத்து பகிர்ந்து கலந்துரையாடி வருவான். இதனை உற்று அவதானித்த ஊரார் உமக்கு ஏன் வீண் செலவை ஏற்படுத்துகிறீர்? என கேட்டார்கள்.

எமது வீட்டார் வீண்செலவு செய்வதில்லையே என கூறுவான் சந்திரன். உமது வீட்டாரின் பிரயாசையை வீணாக கொடுத்து அந்த அகதிகளுடன் உறவாடுவது நல்லதல்ல என்றனர் அயலவர். நான் வீணாக எம் பணத்தை குடித்து வெறித்து கேளிக்கையில் செலவிடவில்லையே. எங்கள் பிரயாசத்தில் சிறு பகுதியை இப்போர்க்காலத்தில் மற்றவருடன் பகிர்வது கொல்வது வீண் என்றால் நாம் மனிதராய் வாழ்வதின் என்ன அர்த்தம் என அயலவருக்கு கூறுவான்.

ஒருநாள் சந்திரன் வாழ்ந்த கிராமமே இடம்பெயரும் சூழல் ஏற்பட்டது.

அயற்கிராமத்தில் உள்ள ஆலயம் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தான். வீடு, வாசல், விவசாய பூமியை இழந்தவன் ஆலயத்தில் அகதியானான். தன் தாயாரின் நிலையும் படுக்கையாகிவிட்டதை எண்ணி மனம் வருந்தி இறைவனிடம் பிரார்த்தித்தான்.

ஏனையவர்களும் யாரும் எமக்கு இல்லையே என ஏங்கித் தவித்த வேளை அவ்வூரைச் சேர்ந்தவர்கள் உதவ முன் வந்தனர். பொருள் பண்டத்தை விட்டு வந்த கவலை வந்தோரை வாட்ட பார்க்க வந்த சிறுவனொருவன் அம்மா, அம்மா எங்களைப் பார்க்க அகதி முகாமில் வரும் சந்திரன் மாமா அங்கே இருக்கிறார். அம்மா எங்கள் வீட்டிற்கு கூட்டிச் செல்வோமா என்றான் சிறுவன். தாயோ பிள்ளையின் விருப்புடன் தமக்கு உதவக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறி கூட்டிச் சென்றனர். தர்மம் தலை காத்ததை எண்ணி சந்திரன் இறைவனுக்கு நன்றி சொல்லி அவர்களுடன் சென்று அவர்களின் நிலத்தில் தன் விவசாயப் பணியை தர்மமாகக் கொடுத்தான்.

துன்பத்திலும் துயர்பகரும் சந்திரன் குடும்பத்தின் வாழ்வு துன்புறும் அகதிகளுக்கு மனித மாண்பின் தர்மத்தை உணர்த்த சுயநல உள்ளங்களை உறைய வைத்தது.

## தனித்துவத்தை ஏற்று ஓற்றுமையை...

இருக்கும் மதங்களும் தங்கள் தனித்துவத்தை மேற்கொண்டு ஒன்றை ஒன்று மேற்கொள்ளாது ஒன்றில் ஒன்று தங்கி ஒன்றில் ஒன்று அபிவிருத்தி செய்ய அழைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக பொருளாதார ரீதியாக உறவினை பேணக்கூடிய வகையில் வருமான ஏற்றத் தாழ்வுகளை அகற்றி பிறருடன் எம்மை பகிர்ந்து கொள்வதன் ஊடாக இத்துறையில் ஐக்கியத்தை ஏற்படுத்தலாம். இவ்வாறு செய்வதன் மூலம் தேசிய மட்டத்தில் ஓரளவு ஐக்கியத்தை ஏற்படுத்தலாம். இவ்வாறு வண. A. ஸ்ரீபன் அடிகளார் 22-08-2002 அன்று பண்டாரவளையில் நடைபெற்ற C.C.Y.M பாசறையில் உரை யாற்றினார்.

## பொசுங்கி போவீர்கள்!

**மனிதாபிமானம் அற்றவர்களே!**
**எங்கள் மங்கையர்கள் என்ன**
**இன்னம் தரும் கேடயங்களா?**
**எம் உறவுகள் உன் தாகம்**
**தீர்ப்பவர்களா?**
**உணர்வற்றவர்களே எச்சரிக்கை!**
**எம் மங்கையர் தப்பிட வழியின்றி**
**ஈரவிழியுடன்....**
**ஏங்கி நிற்கிறார்கள்**
**பெண்களை வதைக்காதே**
**மங்கையர்களை பகைக்காதே**
**எம் உரிமை கிடைக்கும் வரை**
**இம்மண்ணில் புரட்சி செய்வோ**
**ம்**
**துன்பம் எம் தொடர்கதையா**
**மூடர்களே!**
**நாம் பொங்கியெழுந்தால்**
**பொசுங்கி போவீர்கள்!** [illegible]
**யாழ் / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.**

## Love

*I may be able to speak the Languages of men and even of angles, but if I have no love. My speech is no more than a noisy gong or a clanging bell. I may the gift of inspire preaching; I may have all knowledge and understand all secrets; I may have all the faith needed to move mountains – but if have no love, I am nothing.*

*I Cor. 13/1-2*

# சிறுவர் முற்றம்

## அறம் உரைக்கும் மன்றம்

அறம் உரைக்கும் மன்றமொன்று வேண்டும் – அங்கு
அரசரும் ஆண்டியும் சமனாக வேண்டும்
அறம்கூற நீ வரவேண்டும் – அறத்தெய்வா
அறம் சாகா உயிர் பெறவேண்டும்.

அறம்கூற கல்வி இன்றில்லை – நல்ல
அறக்கல்வி கற்(பிப்) போரும் இல்லை
அறம் ஊட்ட நீ வரவேண்டும் – அறத்தெய்வா
அறக்கல்வி புகட்டிட வேண்டும்.

அறம் வாழ வரமொன்று வேண்டும் – இங்கு
அறத்தினது உயிர்காக்க வேண்டும்
அறம் காக்க நீ வரவேண்டும் – அறத்தெய்வா
ஆயுத திகிலின்றி அறம் வாழவேண்டும்.

அறம் பேசு சுதந்திரம் வேண்டும் – அங்கு
அறத்தணிக்கை அழிந்திட வேண்டும்
அறம்பேச நீ வரவேண்டும் – அறத்தெய்வா
அறத் தணிக்கை நீக்கிட வேண்டும்.

அறத்தினது காதலர்கள் வருக – இங்கு
அறத்தெய்வம் வந்துள்ளார் தொழுக
அறமுரைக்க அணிதிரள வருக – அறத்தெய்வா
அறம்வாழ எமை நடத்து இறையே.

**வண. S.D.P. செல்வன்**

**சின்னஞ் சிறியோரை என்னிடம் வரவிடுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org